# மௌலானா ரூமியின்
# சிந்தனைகள்



கவிஞர் ஏ. இக்பால்

ஸபீனா
பதிப்பகம்

ஸபீனா பதிப்பகம்

கோவை. செ. சுந்தரம்பிள்ளை.

10 - 4 - 70

ஸபீனா வெளியீடு—11

முதற்பதிப்பு

1389 ஷவ்வால் 15
1969 டிசம்பர்— 25.

விலை: ரூ. இரண்டு

விற்பனை உரிமை:-

நவலட்சுமி புத்தகசாலை
136, செட்டியார் தெரு, கொழும்பு 11

ஸபீனா அச்சகம்
கொழும்பு—12

விற்பனையாகிறது!
யாழ் வாணன் எழுதிய
அமரத்துவம்
விலை. ரூபா. 2-50

# மௌலானா ரூமியின்

# சிந்தனைகள்

★—★—★—★—★—

—கவிஞர் ஏ. இக்பால்—

VIJAYALUCKSHMI BOOK DEPOT,
248, Galle Road,
WELLAWATTE, COLOMBO-6.
Tel:

ஸபீன பதிப்பகம்

20, பிரைஸ் பிளேஸ், கொழும்பு-12.

# சமர்ப்பணம்

அக்கரைப்பற் றூரீன்ற
ஆசிரிய
அரும்புதல்வ ரத்தனையில்
மூன்றிளமைப்
பொக்கிசங்க ளிவ்வுலகை
நீத்திறைவன்
பொற்புலகு சேர்ந்ததினை
எண்ணிநானும்
அக்குரவோர் சேவைக்கும்
அன்பினுக்கும்
அணியெனவே இந்நூலை
அர்ப்பணித்தல்
தக்கதென எண்ணுவதால்
அவர்களாத்மா
சாந்திபெற அல்லாஹ்வே
அருளுவாயே!



| ஜனுப் எம். ஏ .எச். அப்துல் காதர் | ஜனுப் எம்.பி. எம். இஸ்மாயில் | ஜனுப் எம்.ஏ.எம். அசனர் |
|---|---|---|

# முன்னுரை

இஸ்லாம் அதன் அரசியல் வரலாற்றின் மிக இருள் சூழ்ந்த காலகட்டங்களிலெல்லாம் தலை சிறந்த சிந்தனையாளர்களையும், தத்துவ ஞானிகளையும் ஈன்றெடுத்துள்ளது என்பதை இஸ்லாமிய வரலாறு எமக்குணர்த்தி நிற்கின்றது. இஸ்லாமிய வரலாற்றினை அணுகி ஆராய்ந்த இஸ்லாமிய அறிஞரும், கீழைத்தேய ஆராய்ச்சியாளரும் இப்பண்பினை இஸ்லாமிய வரலாற்றின் ஒரு தனிச்சிறப்பெனக் கருதுவர்.

கி. பி. 1258ம் ஆண்டு நிகழ்ந்த மங்கோலியத் தாத்தாரியரின் படையெடுப்பானது இஸ்லாத்தின் அரசியல் சக்தியை ஆட்டங்காணச் செய்தது. பல நூற்றாண்டுகால உழைப்பின் பயனாய் விளங்கிய விலைமதிக்கவொண்ணாக் கலைச்செல்வங்களையும், பண்பாட்டுப் பெருமையினையும் அழித்து நிர்மூலமாக்கிவிட்டது. மங்கோலியப் படையெடுப்பு இஸ்லாத்தின் அரசியல் சக்தியைச் சீர்குலையச் செய்தபோதிலும் அதன் ஆன்மீக அடிப்படையை பலமிழக்கச் செய்யமுடியவில்லை. அரசியல் துறையில் முஸ்லிம் உலகம் தளர்ச்சியுற்ற

நிலையில் அதன் ஆன்மீக அடிப்படை ஒரு புத்துணர்வைப் பெற்று முஸ்லிம் உலகை உயிர்நிலையாக நின்று இயக்குவிப்பதைக் காண்கின்றோம். இந்தச் சூழ்நிலையிலேயே மங்கோலியப் படையெடுப்பின் அரசியல் விளைவுகளை ஈடுகொடுக்கத் தோன்றிய ஆன்மீக இயக்கத்தின் பிரதிநிதிகளாக பாரசிகம் இரு மெஞ்ஞானச் செல்வர்களை வழங்குகின்றது: அவர்கள்தான் மௌலானா ரூமியும், மகான் ஷெய்கு ஸாஅதியும் ஆவர்.

மௌலானா ஜலாலுத்தீன்ரூமி அவர்கள் ஹிஜ்ரி 604 கி. பி. 1207ல் பல்க் நாட்டில் பிறந்தார்கள். ரூமியின் பிறப்புக்குச் சிலநாட்களின்பின் அவரது தந்தைக்கும் பல்க் நாட்டின் மன்னருக்குமிடையில் சில அரசியல் தகராறுகள் காரணமாக சில மனக் கசப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக பல்க் நாட்டைவிட்டு ஜலாலுத்தீனின் தந்தை குடிபெயர்ந்து சென்றார். இவ்வாறு பல்வேறு இடங்களுக்கும் அலைந்து சென்ற ரூமியின் குடும்பத்தினர் இறுதியில் சின்னாசியாவிலுள்ள (Asia minor) கோன்யா (Iconium) என்னும் ஊரில் குடியேறினர். அரபு மொழியில் சின்னாசியப் பிரதேசம் ரூம் என அழைக்கப்பட்டது. இதிலிருந்தே ஜலாலுத்தீனுக்கு 'ரூமி' என்ற காரணப்பெயர் வழங்கப்படலாயிற்று. ஜலாலுத்தீன் பிரபல சூபிக் கவிஞரான பர்உத்தீன் அத்தாரை நீஸாபூரில் சந்தித்தாரென்றும் ரூமியின் பண்புகளால் கவரப்பட்ட அத்தார் தனது 'அஸ்ரார் நாமா' என்ற மெஞ்ஞான தத்துவங்கள் அடங்கிய நூலை ரூமிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாரென்றும் சிலர் கூறு

வர். ஆனால், இத்தொடர்பு நீடித்ததைப்பற்றிய தற்கான குறிப்புக்களோ, ரூமியின் கருத்துக்களில் அத்தாரின் சிந்தனையின் செல்வாக்குக் காணப்படு வதற்கான ஆதாரங்களோ இல்லை.

ஜலாலுத்தீன் ரூமி ஆரம்பகாலத்தில் சட்டம், தர்க்கம், தத்துவம் முதலிய தர்க்கரீதியான கலை களிலேயே (Exact sagacious) ஆர்வம் } செலுத்தினார் ஆனால் ரூமியின் ஆன்மீகத் தாகத்தையும், மெஞ் ஞான அறிவு பற்றிய வேட்கையினையும் இக்கலை களினால் தீர்க்க முடியவில்லை- எனவே ரூமியின் ஆர்வம் மெஞ்ஞானக் கலையின்பால் சென்றது. புர்ஹானுத்தீன் திர்மதீ, ஷம்ஸ் தப்ரீஸி போன்ற மெஞ்ஞானச் செல்வர்களோடு தொடர்பு கொண்டு 'தஸவ்வுப்' பற்றிய அறிவினை அவர் பெற்றார். ஷம்ஸ் தபரீஸி ரூமியோடு பல்லாண்டு கள் தங்கி அவர்மீது தனது செல்வாக்கினை ஆழப் பதித்துவிட்டார். ரூமியின் கவிதைத் தொகுதி யொன்றிற்கு 'தீவானே ஷம்ஸே தபரீஸி' எனப் பெயரிடப்பட்டிருப்பதே ரூமியின்மீது அவரது செல்வாக்கைக் குறித்து நிற்கின்றது. கி. பி. 1247ல் ஷம்ஸ் தப்ரீஸ் மரணித்ததும் ரூமியை ஆறாத் துயரம் ஆட்கொண்டது. தனது மெஞ் ஞான குருவின் நினைவாக 'மௌலவியா' என்னும் தரீக்காவை ரூமி நிறுவினார்.

மௌலானா ரூமி இஸ்லாமிய உலகம் ஈன் றெடுத்த இணையற்ற மெஞ்ஞானச் செல்வர். பார சீக இலக்கியம் கண்ட தலைசிறந்த மெஞ்ஞானக் கவிஞர். ரூமி எண்ணற்ற பல 'ருபய்யாத்கள்'

'கஸல்கள்' என்பனவற்றை உள்ளடக்கிய பல தனிப்பாடல்களை இயற்றியுள்ளார். அவரது 'தீவான்' என்னும் தொகைநூலில் இடம்பெற்றுள்ளன. தனது மெஞ்ஞான போதகரும், ஞான குருவுமான ஷம்ஸ் தப்ரீஸிக்கு நன்றிக் கடனாக அதற்கு 'தீவானே ஷம்ஸே தப்ரீஸ்' எனப் பெயரிட்டார். அவரது புகழ் பரவக் காரணமாய் அமைந்த பெருநூல் 'மஸ்னவி' ஆகும். 'பாரசீக மொழியின் குர் ஆன்' என இந்நூல் புகழப்படும் பான்மையே அதன் சிறப்பிற்குச் சிறந்த சான்ருய் அமைகின்றது.

சூபித்தத்துவம், அதன் மரபுவழி உண்மைகள், நெறிமுறைகள் என்பனவற்றை உவமான உவமேயங்களைக் கொண்டும், பல உருவசக் கதைகளைக் கொண்டும் மௌலானு ரூமி விளக்கியுள்ளார். உருவகக் கதைகளின் துணைகொண்டு மெஞ்ஞானத் தத்துவங்களை விளக்குதல் பாரசீக இலக்கிய மரபாக இருந்து வந்துள்ளது. இத்துறையில் பரீஉத்தின் அத்தார் என்ற பாரசீக சூபிக் கவிஞர் இயற்றிய 'மன்திக் - தாஇர்' [பறவைகளின் பாராளுமன்றம்] என்ற நூல் பாரசீக இலக்கியத் துறையில் சிறப்பிடம் வகிக்கின்றது. இந்த மரபை அடியொற்றியே மௌலானு ரூமி இப்பெருநூலை இயற்றியுள்ளார். மாபெரும் ஆன்மீக உண்மைகள், மெஞ்ஞானத் தத்துவங்கள், என்பன சிறிய உருவகக் கதைகளின் துணைகொண்டு விளக்கப்படுகின்றன. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள ஆன்மீக உறவினை விளக்குவதும், தனது மூலஸ்தானத்திலிருந்து பிரிந்த மனித ஆத்மா

அந்த மூலப் பொருளை அடைவதன்மூலமே அமைதி பெறமுடிகின்றது என்ற உண்மையும் மஸ்னவியில் விளக்கப்படுகின்றது. மஸ்னவியின் ஆரம்பக் கவிதை இதனை சூட்சகமாக உணர்த்தி நிற்கின்றது.

''சோகக் குரலெழுப்பும் புல்லாங்குழல்
என்ன கதையைக் கூறுகின்றது எனக்
கேளுங்கள்
அது தனது பிரிவின் துயரைப்பற்றிக்
கூறுகின்றது
அதன் மூலஸ்தானமான மூங்கிற் புதர்லிருந்து
தன்னைப் பிரித்துவிட்டார்கள் எனத்
துயரக் குரலெழுப்பி முறையிடுகின்றது....
மஸ்னவி ஷரீபின் இந்த ஆரம்பக் கவிதையில்

மனித ஆத்மாவைப் புல்லாங்குழலுக்கும், புல்லாங் குழலை செய்வதற்கான மூங்கில் வெட்டி எடுக்கப் படும் மூங்கிற் புதரை அந்த ஆன்மாவின் மூலஸ் தானமான இறைவனின் சன்னிதானத்திற்கும உவமிக்கப்பட்டுள்ளது. எனவே புனித ஆன்மா அதன் மூலஸ்தானத்தைச் சென்றடையும் வரை யில் நிம்மதியடைவதில்லை என்ற சூபித் தத்து வத்தை மிக எளிய சாதாரண உவமையின் துணை கொண்டு ரூமி விளக்கியுள்ளார். மஸ்னவியின் இந்த ஆரம்பக் கவிதையைப் பேராசிரியர் பால்மர் (Profeser Palmer) 'Song of the Reed' 'புல்லாங்குழலின் கவிதை' என அழைக்கின்றார். இந்த ஆரம்பக் கவிதையில் கூறப்படும் தத்துவமே மஸ்னவியில் விரித்துரைக்கப்படுகின்றது. மஸ்னவிக்கு மௌள

லானா ரூமி அரபு மொழியில் எழுதியுள்ள முன்னுரையில் அது பாரசீக மொழியிலுள்ள குர்ஆனென்றும், உன்னதமான அறிவுரைகளையும், ஞானங்களையும் உள்ளடக்கிய பெருநூலென்றும் குறிப்பிடுகின்றார். ரூமியின் 'தீவானே ஷம்ஸே தப்ரீஸி', 'மஸ்னவி' ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பேராசிரியர் நிக்கல்ஸன் ரூமியின் மொழி நடை பாரசீகக் கவிஞர்களுள் ஒருவரான ஹாபிஸின் நடையின் கவர்ச்சியையும், ஒழுங்கையும் பெறவில்லை எனக் கருதுகின்றார். ஆனால் ஒரு கவிஞர் என்ற முறையில் தனது சூபிக் கருத்துக்களை அவற்றின் உயிர்த்தன்மை மாறாமல் கவிதை உருவில் வெளியிடுவதில் மகத்தான வெற்றிகண்டார் என்றும் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக இஸ்லாமிய வரலாற்றிலும், சிறப்பாக சூபித் தத்துவத்தின் வளர்ச்சியிலும் மௌலானா ரூமியின் செல்வாக்கு ஆழப் பதிந்துள்ளதை நாம் அவதானிக்க முடிகின்றது.

ரூமியின் வரலாறு என்பது இஸ்லாமிய தத்துவத்தின் வரலாறு எனக் கூறக்கூடிய அளவிற்கு ரூமியின் இலக்கியப் பணியும், இஸ்லாமியப் பணியும் விளங்கும் பான்மையினை கலாநிதி கலிபா அப்துல் ஹகீம் என்பவர் தனது 'The metaphysics of Rumi' என்ற ஆராய்ச்சி நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

The Study of Rumi is interesting not: Because he is the greatest mystic poet of Islam but becauseof the fact that in him we find a man who has left no problem of Ph liosophical and religious life untouched. In him we find not the creation of problms but the rethinking in the light of Personal experience of all that had gone before him So in one way the study of Rumi is the study of the best achivements of Philosophical and religious life in Islam. (The Metaphysics of Rumi – P. 3)

"ரூமியைப் பற்றிய ஆராய்ச்சி மிக இன்பம் பயப்பதாகும். அது அவர் இஸ்லாத்தின் தலை சிறந்த மெஞ்ஞானக் கவிஞர் என்ற காரணம் பற்றியன்று. ஆனால் வாழ்க்கையின் மத அடிப் படையிலும் தத்துவ அடிப்படையிலும் எழுந்த எல்லாப் பிரச்சினையையும் தொட்டுச் சென்றவர் என்ற முறையிலேயே ரூமிபற்றிய ஆய்வு இன்பம் பயப்பதாக அமைகின்றது. ரூமி பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால் அவருக்கு முன்னெ ழுந்த பிரச்னைகள்பற்றித் தனது சொந்த அனுபவத் தின் துணைகொண்டு ஆய்வு நிகழ்த்தினார். எனவே ஒருவகையில் பார்க்கப்போனால் ரூமியைப்பற்றிய ஆராய்ச்சியானது இஸ்லாத்தின் மதத்துறையி லும், தத்துவத் துறையிலும் சாதிக்கப்பட்ட சாதனைகள் பற்றிய ஆராய்ச்சியாகவே அமையும். ரூமியைப்பற்றிய ஆராய்ச்சி அவரது மஸ்னவியை மையமாகக் கொண்டே நிகழ்த்தப்படல் வேண் டும். ஆனால் இது அவ்வளவு இலகுவான செய லன்று. ஏனெனில் மஸ்னவியின் அமைப்பு முறை மிகச் சிக்கலானது. பல்வேறு வர்ணங்கொண்ட

நூலிழைகள் ஒன்றுக்கொன்று பின்னப்பட்டு இழைக்கப்பட்ட ஆடைபோன்று மஸ்னவி விளங்குகின்றது. அதனை பிரித்துணர ஆழ்ந்த பொறுமை வேண்டும். ஒரு சாதாரண எளிய கதையினூடே சிக்கலான தத்துவத்தைப் பின்னிச் செல்லும் பண்பு மஸ்னவியில் உண்டு. ஒரு அறிவுரை, அதனைத் தொடர்ந்து ஆழ்ந்த பெருந்தத்துவம், திடீரென மெஞ்ஞானக் கிளர்ச்சியின (ECTACY) டியாக எழும் ஒரு கருத்துரை, அதனைத் தொடர்ந்து ஒரு சிறு உருவகக்கதை, என ஒழுங்கற்று, ஒன்றோடொன்று பின்னப்பட்டும், அதே நேரத்தில் ஒன்றுக்கொன்று தொடர்பற்றும் விடயங்கள் விளக்கப்படுகின்றன. எனவே மஸ்னவியின் முத்துக்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து ஒன்றாக இணைத்துவிட்டால் ரூமியின் சிந்தனையின் ஒருமைப்பாட்டையும், தத்துவத்தின் சாயலையும், மெஞ்ஞான அறிவுரைகளின் முத்திரையினையும் நாம் அறிந்து இனங்கண்டுகொள்ள முடியும்.

மௌலானா ரூமியின் தலையாய நோக்கம் மஸ்னவி மூலமாக மனித இனத்திற்கு மெஞ்ஞான நெறிமுறைகளை விளக்குவதாகும். இஸ்லாமிய வரலாற்றில் மூன்று வகையான சிந்தனைகள் பூரண வளர்ச்சியடைந்துள்ள காலகட்டத்திலேயே மௌலானா ரூமி தோன்றினார். தஸவ்வப் (Mysticism) காலம் (Scholaticism) பல்ஸபா

(Ph losophy) ஆகிய மூன்றுமே அவையாகும். ரூமி ஹிஜ்ரி 604- கி. பி. 1207ல் பிறந்தார். அவரது தோற்றத்திற்கு சற்று முன்னர் இபுனுருக்தின் (ஹி. 520-595 கி. பி. 1126-1198) சிந்தனைகளில் கிரேக்கத் தத்துவக் கருத்துக்கள் இஸ்லாமிய சிந்தனையின் சாயலில் விளக்கப்பட்டு கிரேக்கத் தத்துவங்களின் செல்வாக்கு உச்ச நிலையடைந்திருந்தது. ஹி. 150—கி. பி. 767ல் மரணித்த பிரபல மெஞ்ஞானி அபூஹாஷிம் முதற்கொண்டு ரூமியின் உடனிகழ்காலத்தவரான இபுனுல் அரபிவரை சூபித்தத்துவம் பூரண வளர்ச்சியடைந்திருந்தது. ரூமிக்கு முன்பதாக இமாம் அல்கஸ்ஸாலி [கி. பி. 1058-1111] காலம், பலாஸபா, தஸவ்வப், ஆகிய மூன்று அடிப்படைகளையும் இணைத்துப் பொதுவான ஒரு தத்துவத்தை வகுத்திருந்தார். எனவே மௌலானா ரூமி இந்த சிந்தனைகள், தத்துவங்கள், மெஞ்ஞான நெறிமுறைகள், ஆன்மீக விளக்கங்கள் அனைத்துக்கும் வாரிசாகவே தோன்றினர். அவருக்கு முன் வளர்ந்திருந்த அத்தனை தத்துவங்களையும் இணைத்து ஒரு பூரணமான, பொதுவான தத்துவமொன்றை அவர் உருவாக்கினர்.

அவரது தத்துவங்களில் முக்கிய அடிப்படையாக விளங்குவது பரிணாமவாதம் பற்றிய தத்துவமாகும். இந்தத் தத்துவத்தை முதலில் சிந்தித்துணர்த்திய முஸ்லிம் அறிஞர் இபுனு மிஸகவை

(ஹி. 421 மரணம்) ஆவர். ஆனால் ரூமியின் பரிணாமவாதம் பற்றிய தத்துவம் நவீன விஞ்ஞானிகளின் பரிணாமத் தத்துவத்திலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. டார்வின் போன்ற நவீன சிந்தனையாளர் மனித இனத்தின் மூலத் தோற்றம் பற்றி விளக்கவே இத்தத்துவத்தைக் கையாண்டனர். மரணத்திற்குப் பிறகு நிகழும் வளர்ச்சிபற்றி அவர்கள் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் ரூமி வேறு ஒரு கோணத்திலிருந்து பரிணாம தத்துவத்தை விளக்குகின்றார். ''மனிதன் ஆத்மா அதன் மூலப் பொருளிலிருந்து பிரிக்கப்பட்டது. எப்படி? யாரால்? என்பது அறிவுக்கு அப்பாற்பட்டது. இவ்வாறு பிரிவுண்ட ஆன்மா அதன் மூலஸ்தானத்தை நோக்கி மீளுவதற்கு முயற்சிக்கின்றது. எனவே வாழ்க்கை என்பது அது தன் மூலஸ்தானத்திற்கு மீளுவதற்கான முயற்சியேயாகும். அது எங்கிருந்து வந்ததோ அந்த இடத்தை நோக்கி படிப்படியாக மீளுவதற்கு பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் அது முயலுகின்றது. வாழ்வின் அடிப்படையான ஆன்மா சடத்திலிருந்து தனது பிரயாணத்தை ஆரம்பித்து மேலெழுந்து வளர்ந்து செல்ல விழைகின்றது'' மனிதனின் பரிணாம வளர்ச்சி உடலோடு முடிவதில்லை. மரணத்தோடு பூர்த்தியுறுவதில்லை. அது சூழலின் நிர்ப்பந்தத்தால் ஏற்படுகின்றதுமன்று. ஒரு பொதுவான ஒழுங்கிற்கும், சட்டத்திற்கும், உட்பட்டே இந்தப் பரிணாம வளர்ச்சி நிகழ்கின்றது. அத்தோடு ஒரு அடிப்படை நோக்கத்தோடேயே இந்தப் பரிணாம வளர்ச்சி நிகழ்கின்றது. அதுவே மூலஸ்தானத்திலிருந்து பிரிந்த மனித ஆத்மா தனது

மூலத்தை நோக்கிச் செல்ல முனையும் நோக்கமாகும். மௌலானா ரூமியின் இந்தத் தத்துவம் டார்வினின் பரிணாம தத்துவத்திற்கு முற்றிலும் மாறுபட்டு நிற்பதை நாம் ஈண்டு காணமுடிகின்றது.

மனித ஆத்மா தனது மூலத்திற்கு மீளும் பொருட்டு எடுக்கும் இம்முயற்சியில் ஒவ்வொரு பொருளையும் தனது நிலையிலிருந்து உயர்ச்சியடைந்து செல்லத் தூண்டுவது 'அன்பு' என்ற சக்தியாகும். வாழ்வின் தோற்றம், வளர்ச்சி, வெளிப்பாடு, பிணைப்பு அத்தனையும் அன்பின் பிரதிபலிப்பாகும். இலட்சியத்தை அடைய முயல்வதென்பது அன்பு அழகை அடையச் செய்யும் பிரயத்தனமாகும். வாழ்க்கையின் அனைத்து பொருட்களும் அன்பின் சக்தியினாலேயே இயக்குவிக்கப்படுகின்றன. அன்பின்றேல் வாழ்வின் அசைவில்லை, ஓட்டமில்லை.

அன்பைப் பற்றிய ரூமியின் தத்துவத்தைப் போன்றே அறிவுபற்றிய அவரது விளக்கமும் அமைந்துள்ளது. பிரபஞ்சம், மனித வாழ்வு, ஆன்மா, மரணம் என்பனவற்றைப்பற்றிய உணர்வைப் பெற புலன்களின் வழியாகப் பெறப்படும் பகுத்தறிவு என்றும் துணை நிற்கமுடியாது என்ற கருத்தினை இமாம் கஸ்ஸாலி அவர்கள் தங்களது 'முன்கித் மின் ளழால்' என்ற நூலில் விளக்கியுள்ளார்கள். மௌலானா ரூமியும் இந்தத் தத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றார். எனவே, யதார்த்தத்தை அறிய அன்பு ஒன்றுதான் துணை புரியமுடியும் எனக் கருதும் ரூமி அன்புபற்றிய விளக்கத்தை அளிக்கவில்லை.

அன்பை விளக்கும் வகையில் நான் எதைச் சொன்னாலும் அன்பைப்பற்றிச் சொல்ல நான் தயங்குகின்றேன். அன்பின் விளக்கத்தை அன்பு ஒன்றுதான் அளிக்க முடியும். சூரியனுக்கு ஆதாரம் சூரியனே! வார்த்தைகளினால் நீங்கள் ஒன்றை விளக்க முனைந்தால் நீங்கள் உண்மைக்கு மேலால் இன்னொரு திரைபோடுகின்றீர்கள்!

எனவே மதத்தின் ஆன்மீக ரகசியங்களை அறிய 'இஷ்க்' என்னும் பேரின்பக்காதலே துணை புரியமுடியும். மௌலானா ரூமியின் இக்கருத்துக்களின் செல்வாக்கினை இக்பாலின் சிந்தனைகளில் நாம் அவதானிக்க முடிகின்றது.

ரூமியின் தத்துவத்தின் இன்னொரு முக்கிய பண்பு வாழ்க்கையைப்பற்றிய உணர்வுரீதியான விளக்கமாகும். மனிதனைப்பற்றிய உயர்ந்த கோட்பாடாகும். மனிதன் அவனது விதியைத் தானாகவே உருவாக்குவதாக ரூமி கருதுகின்றார். பாவம் என ஒன்று இல்லையெனில் நன்மையும் இல்லை என்பது ரூமியின் தத்துவமாகும். உலகில் பாபமும், தீமையும் இருக்கின்றன. அந்த தீமைக்கு எதிராகப் போராடுவதன்மூலமே மனிதன் உயர்ச்சியடைய முடியும் என்கின்றார். இந்தத் தத்துவத்தைப் பின்வருமாறு அழகாக விளக்குகின்றார்.

உண்மையின்றி பொய் தோன்றுவதில்லை
தங்கக்காசு என நினைத்து செல்லாக்காசை
ஒரு மூடன் வாங்கினான்
நியாயமாக அனுமதிக்கப்பட்ட பணமில்லாவிடில்
செல்லாக்காசு எங்கிருந்து வரமுடியும்?

தவறான பொருட்கள் உலகில் இல்லாவிட்டால்
எல்லோருமே நுட்பமான வணிகர்களாக இருப்பர்

தவறு என ஒன்று இல்லையெனில்
தகுதியானதையும், தகுதியற்றதையும்
பிரித்தறிவதெப்படி?

எல்லாவற்றிலும் தவறிருந்தால்
அறிவுக்கு வேலை ஏது?

எல்லாம் ஒரேவகையான மரமென்றால்
சந்தணமரம் எங்குமே இருக்காது.

அனைத்தும் நன்மையே எனச் சொல்பவன் மூடன்
அனைத்தும் தீமையே என்பவனும் அறிவிலியே!

எனவே உலகில் தீமை, நன்மை என இரு சக்திகள் இருப்பதால் வாழ்வு பூரணத்துவம் பெறுகின்றது. இதன் காரணமாகவே வாழ்வில் அசைவும், ஓட்டமும் பிறக்கின்றது. இந்தத் தத்துவத்தை ரூமி பின்வருமாறு விளக்குகின்றார்.

''பகைவரில்லையெனில் புனித யுத்தம் (ஜிஹாத்)
நிகழமுடியாது.

ஆசையும், உணர் களும் இல்லையெனில்

இறைவனுக்கு அடிபணிதல் என்பது
இருக்கமுடியாது.

ஆசையில்லையெனில் மனக்கட்டுப்பாடும் இல்லை.

எனவே ஆசைகளைத் துறந்த துறவியாகாதே!

கற்பும், ஒழுக்கமும் ஆசையிலிருந்துதான்
தோன்றுகின்றன.

ரூமியின் இந்தத் தத்துவத்தின் அடிப்படையி லேயே இக்பால் தனது 'குதி' (KHUDI) பற்றிய தத்துவத்தை உருவாக்கியுள்ளார்.

தனது மூலஸ்தானத்திலிருந்து பிரிந்த மனித ஆத்மா தனது மூலத்தை நோக்கிச் செல்ல ஒரு மாபெரும் போராட்டத்தில் சிக்குகின்றது. உலகிலுள்ள ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்தி களுக்கிடையில் சிக்கும் இப்போராட்டம் அதனை வளர்ச்சியடையச் செய்கின்றது. அன்பெனும் சக்தியை உயிர்நிலையாகக் கொண்டு, போராட் டத்தினால் உரம்பெற்று தனது இறுதி இலட்சிய மான பூரண அழகை, நித்திய அழகை, மூலத்தை நோக்கி மனிதன் பிரயாணம் செய்கின்றான். அந்த உயர் லட்சியத்தை அடைந்தவனே 'இன் ஸானுல் காமில்' பூரண மனிதன் என ரூமி குறிப் பிடுகின்றார்.

'இன்ஸானுல் காமில்' என்னும் பூரண மனி தனைப்பற்றிய தத்துவத்தை ரூமிக்குமுன் பல அறி ஞர்கள் விளக்கியுள்ளனர். இமாம் கஸ்ஸாலி தங் களது 'மிக்காதுல் அன்வார்' என்ற நூலில் இத் தத்துவத்தை விளக்கியுள்ளார். ரூமியின் உட னிகழ்காலத்தவரான இபுனுல் அரபியும் இதுபற்றி ஆராய்ந்துள்ளார். பிற்காலத்தில் அப்துல் கரீம் ஜீலி என்பார் 'இன்ஸானுல் காமில்' என்ற பெய ரில் ஒரு தனி நூலையே இயற்றியுள்ளார். மௌலானா ரூமியும் இவர்களின் வழிநின்று இந்தத் தத்துவத்தை ஆராய்கின்றார். 'இன்ஸானுல் காமில்' என்னும் பதம் வாழ்வின் லட்சியத்தை

அடைந்துவிட்ட தனது மூலத்திற்கு மீண்டுவிட்ட மனித ஆன்மாவின் பூரண வளர்ச்சி நிலையைக் குறிக்கின்றது. இது மனிதன் இறைவனாகும் நிலையன்று என்பதை ரூமி கண்டிப்பாக வற்புறுத்தி விளக்குகின்றார். பகலில் நட்சத்திரங்கள் சூரியனின் பேரொளியில் தம் ஒளியை இழப்பதுபோல நெருப்பிலிடப்பட்ட இரும்பு நெருப்பின் தன்மையைப் பெறுவதுபோல மனிதன் இந்நிலையில் இறைவனின் பண்புகளைப் பெறுகின்றான். ஆனால் அது மனிதன் இறைவனாகும் நிலையன்று!

பொதுவாக இஸ்லாமிய வரலாற்றிலும், சிறப்பாக சூபித் தத்துவத்தின் வரலாற்றிலும் ரூமிக்குச் சிறப்பிடமுண்டு. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய பல சிந்தனைகளையும், தத்துவங்களையும் ஒன்றாய் இணைத்து ஒரு பொதுவான தத்துவத்தை அவர் உருவாக்கினார். இஸ்லாமிய வரலாற்றில் ரூமியின் செல்வாக்கு ஆழப்பதிந்துள்ளது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக் கவிஞரும், சிந்தனையாளருமான அல்லாமா இக்பால் தமது தத்துவத்தினை ரூமியின் சிந்தனையின் அடிப்படையிலேயே அமைத்தார். 'பீரே ரூம்' 'ரூம் நாட்டின் கிழவன்' என ரூமியை வர்ணிக்கும் இக்பால் 'ஜாவிது நாமாவில்' ரூமியைத் தனக்குக் கிரகங்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டியாகக் கொள்கின்றார். இக்பாலின் 'குதி' பற்றிய தத்துவமும், அறிவுபற்றிய கோட்பாடும், ரூமியின் சிந்தனையின் அடிப்படையில் எழுந்தவையாகும்.

மௌலானா ஜலாலுத்தீன் ரூமியைப்பற்றிய விரிவான விளக்கம்கொண்ட நூல்கள் தமிழ் மொழியில் இல்லாமை பெருங் குறையாகும். ஆங்காங்கு மஸ்னவியின் கவிதைகள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன.

நண்பர் ஏ. இக்பால் அவர்கள் மஸ்னவியின் பாடல்களின் கருத்துக்களைத் தழுவி சில கவிதைகளைத் தமிழில் படைப்பதன்மூலம் ரூமியின் சிந்தனைகளை தமிழ்கூறு உலகிற்கு அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்க முயற்சியாகும். இக்கவிதைகளில் சிலவற்றை 'அல்-மதீனா' என்ற சஞ்சிகையில் படித்த உணர்வு எனக்குண்டு. அப்பொழுதே இந்தப் பணியினை நான் மனமாரப் பாராட்டினேன். எனவே நண்பர் இக்பால் அவர்கள் அவரது நூலிற்கு மௌலானா ரூமியைப்பற்றிய விளக்கவுரையொன்றினை எழுதிக்கேட்டபொழுது அதனைப் பெரும் பேறாகவே கருதினேன். பல்கலைக் கழகத்தில் பாரசிக மொழிப்பாடத்திற்கு மஸ்னவியின் சில பாடல்களை படித்தபொழுதேயே பரீட்சை நோக்கத்தை மறந்து மஸ்னவிபற்றிய தத்துவ விசாரணையில் இறங்கியது இன்னும் உள்ளத்துள் பசுமையாக இருக்கின்றது. நண்பர் இக்பாலைத் தமிழிலக்கிய உலகம் நன்கறியும். சிறுகதைத் துறையிலும், கவிதைத் துறையிலும் தனக்கெனத் தனியொரு பாதை வகுத்துக்கொண்டு எழுதும் எழுத்தாளர். அவரோடு தொடர்புகொண்டு உரையாடிய பல

சந்தர்ப்பங்களில் அவரது இஸ்லாமியப் பற்றை யும், உணர்வையும் உணரமுடிந்தது. முஸ்லிம் களின் இலக்கியப் பணியில் இஸ்லாமிய முத்திரை இருத்தல் வேண்டும் என்ற கொள்கையுடையவர்.

இந்நூலில் ரூமியின் சிந்தனைகள் பலவற்றைத் தமிழிலக்கிய உலகிற்கு வழங்க எடுத்துள்ள முயற்சியில் நண்பர் இக்பால் வெற்றிபெற்ரு ரென்றே கூறவேண்டும். மஸ்னவியில் விலை மதிக்கவொண்ணு முத்துக்கள் ஆங்காங்கு சிதறிக் காணப்படுகின்றனவென்றும், அவற்றினைத் தேடிக் கண்டுபிடித்தலே ஆராய்ச்சியாளனின் பணி என்றும் நான் ஏற்கனவே என் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளேன். நண்பர் இக்பால் மஸ்னவி யின் இணையற்ற முத்துக்கள் பலவற்றை இந்நூலில் கவிதையுருவில் தந்துள்ளார். அத்தனை கவிதை களினதுமடியாக ரூமியின் பொதுவான அடிப் படைச் சிந்தனை அடிச்சரடாக வருவதை நாம் காணமுடிகின்றது. இந்த அடிப்படைச் சிந் தனையை இனங்கண்டுகொண்டதில் தான் நண்பர் இக்பாலின் வெற்றி தங்கியிருக்கின்றது. இம் முயற்சியினை தமிழ்கூறு நல்லுலகமும் பெருமனத் தோடு வரவேற்கும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு.

எப். ஏ எம். சுக்ரி B. A. (Hons)

25-12-69.

அரபு விரிவுரையாளர்

இலங்கைப் பல்கலைக்கழகம்

கொழும்பு.

# மதிப்புரை

சிந்தனைச் சிற்பி, தத்துவத் தந்தை, அற நெறி அரசர், மெஞ்ஞான மேதை, இறை நேசச் செல்வர், கவிதைக் கோமான், பாரசீகப் பெருங் கவிஞர் மேன்மைக்குரிய மௌலானா ஜலாலுத் தீன் ரூமி (றஹ்) அவர்களது கருத்துச் செறிவுடைய அரும் பெரும் காவியப் படைப்புகள் அனைத்தும் ஆன்மீகத்தின் அடியொட்டி எழுந்தனவாகும். மௌலானா அவர்களின் அகத்தெளிவைத் தரும் அரிய பெரிய அறிவுக் கருவூலமாகிய 'மஸ்னவி ஷரீப்' உலகப் பிரசித்தி பெற்றது. பேரறிஞர் மௌலானா ரூமி அவர்களின் அறிவுக் களஞ்சியத்தின் அடியிற் றோன்றிய ஆழிய கருத்துக்களையும், பரந்து விரிந்த போதனைகளையும் பொதிந்தவோர் கவிதைத் தொகுப்பை பெரு முயற்சியுடன் உருவாக்கி ஈழ முஸ்லிம்களின் இதயங்களை மலர வைத்துள்ள ஆசிரியர் இக்பால் அவர்களுக்கு மௌலானா ரூமியின், 'இந்த உலகத்தை மனிதனின் முயற்சியே சிறப்பாக்குகிறது. அவனுடைய செயல் திறன் எங்கும் பிரதிபலிக்கிறது. மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக்கும் ஆற்றல் இப்படி வெளிப்படுகிறது. மனிதன் முயற்சியைத் துறந்துவிட்டால், இந்த உலகம் தேங்கிநிற்க ஆரம்பித்துவிடும்'. என்ற ஒரேயொரு தத்துவார்த்தமே இந்நூலை உருவாக்குவதற்கு உயிரூட்டியிருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அழகு சொல்லடுக்கி, எழிற் கவிதை வடிக்கும் திறமைக்குரிய ஈழத் திருநாட்டுக் கவிஞர்களின் வரிசையில் இடம்பிடித்துக்கொண்டுள்ள கவிஞர் ஏ. இக்பால் நயம் சொட்டும் பல கவிதைகளைப்

புனைந்து 'கவிதைப் பொழிவாக' வானொலியில் பொழிந்தமை அவரது பேராற்றலுக்குப் போதிய சான்றாகும் என எண்ணுகிறேன். 'மௌலானா ரூமியின் சிந்தனைகள்' என்ற மணிமகுடத்தின் கீழ் வானொலியில் ஒலிபரப்பாகிய கவிஞர் ஏ. இக்பால் அவர்களின் கவிதைப் பொழிவிலே எவர் மனத்தையும் கவர்ந்திட வல்லதும், எனதுள்ளத்தை வெகுவாக ஈர்த்ததுமான மௌலானா ரூமியின் தத்துவார்த்தமொன்றினை தக்க முறையில் விளக்கும் கவின்மிகு கவிதையடியொன்றை ஈங்கு உரைத்தல் ஏற்புடைத்தாகும்.

பொறுப்புடைய காரியத்தைச் செய்யவென்று
பொறுப்பித்து யுனையனுப்பி வைத்தவனின்
பொறுப்பெல்லாம் மறந்துடனே செயற்படுத்தா(து)
பொறுப்பற்ற உனதுபல கருமங்களைப்
பொறுப்பெடுத்துச் செய்வதிலே அலைந்துவிட்டுப்
பொறுப்பித்தவன் முன்னே விழிக்கும்போது
பொறுப்பற்றேன், செயல்வேறு செய்தேனெனும்
பொறுப்பில்லா வாதமிதை யார்தானேற்பார்

கவிதைத் துறையிலே களங்கமிலா உளத்துடன் கவிஞர் இக்பாலின் முதலாவது முயற்சியாக உருவெடுத்துள்ள இந்தக் கவின்மிகு கவிதைக் கொத்து காலமுள்ளளவும் கண்ணிம் பெற்று, மதிப்புப் பெற்று, மக்களின் மனத்தில் மகத்தானதோர் இடம் பெற்று எழில்பெறும் என்பதில் ஐயமில்லை.

வஸ்ஸலாம்.

இங்ஙனம்,

அல்ஹாஜ்—மௌலவி இஸட். எல். எம். முஹம்மத்
முஸ்லிம் நிகழ்ச்சி அமைப்பாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு.

25-12-69.

# சிறப்புரை

'மௌலானா ரூமியின் சிந்தனைகள்' என்ற தலைப்பின் கீழ் ஆசிரியர் ஜனாப் ஏ. இக்பால் அவர்கள் தொகுத்துள்ள பாடல்களை நான் வாசித்தபோது என் சிந்தனை பல வருடங்களுக்கு முன் நான் வாசித்த ஜனாப் பீர்முஹம்மது ஸாஹிப் அவர்கள் வெளியிட்டிருந்த 'மஸ்னவி ஸரீப்' பால் என்னை எடுத்துச்சென்றது. தமிழில் வெளியான இம்மஸ்னவி ஸரீப், மௌலானா ரூமியவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி மௌலானா ரூமியவர்கள்பால் ஒருவித ஈர்ப்பையும் என்னுள்ளத்தில் ஏற்படுத்தியது. தாம் ஆக்கியுள்ள மௌலானா ரூமியின் சிந்தனைகள் என்ற நூலுக்குச் சிறப்புரை ஒன்று தர வண்டுமென ஜனாப் ஏ. இக்பால் என்னைக் கேட்டபோது அதை மனமுவந்து ஏற்றுக்கொள்ள இது ஒரு முக்கிய காரணமாகிற்று.

இஸ்லாமிய சூபிக் கவிஞர்களிடையே மௌலானா அவர்கள் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கிறார்கள். அவர்களது 'மஸ்னவி' பாரசீக மொழியின் குர்ஆன் என்று கூறுமளவிற்கு குர்ஆனின் போதனைகளைத் தெளிவாக விளக்கும் ஒரு செய்யுள் தொகுப்பாக அமைந்துள்ளது. தமிழ் மொழியில் மௌலானா ரூமியவர்களைப்பற்றிப் பல நூல்கள் சமீப காலந்தொட்டே வெளிவருகின்றன. ஆர். பி. எம். கனி அவர்கள் 'மஸ்னவி'யை அழகிய தமிழ்வசன நடையில் இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார்கள். முழு 'மஸ்னவி'யையும் கூடிய விரைவில் வெளியாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார். அல்லாஹ் அவரது முயற்சிக்கு வெற்றியளிப்பானாக.

மௌலானா ரூமியவர்களது சிந்தனைகளை, அவர்கள் செய்யுள் நடையிலேயே வெளியிட்டுள்ளார்கள். ஆனால், தமிழ்மொழியில் மஸ்னவியின் கருத்துக்கள் இதுவரை செய்யுள் நடையில் வரவில்லை. இக்குறையை இப்புத்தக ஆசிரியர் ஏ இக்பால் அவர்களது ஆக்கம் ஓரளவு நீக்யுள்ளது. எவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடியவாறு எளிய அழகிய நடையில் இப்பாக்கள் அமைந்துள்ளன. இப்படியான செய்யுட் தொகுப்புகளை நண்பர் ஏ.இக்பால் அவர்கள் ஆக்கி இஸ்லாமிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ அல்லாஹ் அருள்பாலிப்பானாக

**ஜனாப் ஐ. எல். எம். சுஐப் B. A. (Hons)**
**அதிபர் அழுத்கம ஸாஹிரு கல்லூரி.**

# பதிப்புரை

ஸபீனா பதிப்பகத்தின் **11-வது** நூலாக ஈழத்து இஸ்லாமிய இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவரான ஜனாப் ஏ. இக்பால் அவர்களின் இந் நூலை வெளியிடுவதில் பெருமையடைகிறோம். இஸ்லாமிய இலக்கியச் செல்வங்களை வேற்றுமை பாராது, நவீன காலத்தினதையும், மறையப் போகும் பழைய ஆக்கங்களையும் அவ்வப்போது பதித்து நஷ்டமடைந்தபோதும் அவை வெளிவர வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுவதில் நாம் பின்னிற்கவில்லை. இஸ்லாமியப் பெருமக்கள் தங்களது வீட்டில் தேவைப் பொருளாக ஒரு சிறு வாசிகசாலையையுமுண்டாக்கி, நமது பாரம்பரிய இலக்கியச் செல்வங்களைப் பாதுகாத்துப் படிப்பதில் அக்கறை கொள்ளவேண்டும். அதனால் வீட்டிலுள்ளோரும், தேடிவருவோரும் சற்று நேரமாவது அறிவை விருத்திசெய்யும் பணியிலீடு படுவர். 'கல்விக்குயிர் அளிப்பவன் என்றும் மரிணிப்பதில்லை' என்பது எங்கள் நபி (ஸல்) அவர்ளின் வாக்கு. ஆகையினால், இஸ்லாமிய வர்த்தகப் பெருமக்களும் ஏனைய செல்வந்தர்களும் நடுத்தர வகுப்பினரும் வருடாந்தப் பரிசுகள், அன்பளிப்புகள் வழங்கும்போது. இஸ்லாமிய இலக்கிய நூல்

களை வாங்கி அளித்தால் பிரயோசனமான தல்லவா? அந்த வழி வெளியீட்டாருக்கும், நூலறிஞர்களுக்கும் ஊக்கம் கொடுக்கும் நல்வழி யான்போதும், நமது பாரம்பரிய பண்பாடு கள்கூட அழியாது பாதுகாக்கப்படும்.

'மௌலானா ரூமியின் சிந்தனைகளி'ல் திளைத்து ஊறிய நமது கவிஞர், அவரை ஆட் கொண்ட கருத்துக்களைத் தெளித்துக் கவிதையில் தந்திருக்கின்றார். தமிழில் கவிதை உருவில் முதன் முதலாக மௌலானா ரூமி(ரஹ்) அவர்களின் சிந் தனைத் தெளிவு புத்தக ரூபமாவது இதுதான். ஆகையினால், இவ்வாக்கத்தை மன உவப்புடன் வெளியிடுகிறோம். தமிழறிந்தோரும் இவ்வாக்க பூர்வமான இலக்கிய வெளியீடுகளை அவ்வப் போது சளைக்காது வெளியிட ஊக்கந்தருவார்கள் என நம்புகிறோம்.

பி. எம். எம். மொஹிதீன்.

# என் கருத்து

வல்லவனும் அல்லாஹ்வின்
வான்புகழும் நாமமதைச்
சொல்லித் தொடங்குகின்றேன்.

அல்லாஹ் வுக்கஞ்சி அவனுக் கடிபணிதல்
எல்லா இஸ்லாமியரும் ஏற்ற இலட்சியமாம்.

அந்த இலக்கியத்தை அடிப்படையாய்க் கொண்டெனது
சிந்தை கவர்ந்த இந்தச் சிறுநூலை ஆக்கியுள்ளேன்.

ஆக்கிய இக்கவிதைகளை அப்பொழுதே வானொலியில்
தூக்கிப் பொழிவு செய்தேன் துணைசெய்தோர்க்—
கென்நன்றி.

முன்னுரையும் சிறப்புரையும் முழுமனதாய்—
மதிப்புரையும்
இந்நூற்களித்த பெரும் சான்றோர்கட் கென்நன்றி,

மௌலானா ரூமியவர் மனக்கருத்தின் தத்துவங்கள்
சில கவர்ந்து எனதாக்கிச் சேர்த்த இந்நூற்செப்புபவை

தமிழறிந்தோர் விளங்குகின்ற தன்மையிலே-
புனைந்துள்ளேன்
அமிழ்தமெனப் பருகியிதை ஆதரிக்க வேண்டுகின்றேன்.

அச்சடித்து வெளியிட்ட அன்புடையோர் 'ஸபீனா'வின்
மெச்சுமுதவிகட்கு மிகையாக நன்றிசொல்லி

என்றும் இவ்வுணர்வில் ஏற்ற வுதவிகளை
நன்றுடனே செய்த நண்பர்கட்கும் எந்நன்றி.

''றிபாயா மன்ஸில்'' —ஏ. இக்பால்
தர்கா நகர்,
25-12-1969

# காவல்

உலகத்தின் புகழ்க்கவிஞர்
ஞானியவர்
அல்லாமா இக்பாலைக்
கவர்ந்தபெரும்

''மௌலானு றூ ' யெனும்
ஞானிதந்த
''மஸ்னவி''யைப் படித்தெனது
அறிவுமட்டில்

நிலையாக்கிச் சிந்தனைகள்
பொறுக்கியிங்கு
நிலவுதமிழ்ப் பாவாக்க
உதவிசெய்த

நிலைபெரிய வல்லவனும்
அல்லாஹ்வுக்கே
நித்தியபுகழ்; பிழையிருப்பின்
பொறுத்தருள்க

# மௌலானா ரூமியின் சிந்தனைகள்

வானவியல் நிபுணன் தன்
கருவிகொண்டு
வையகத்தே நின்றுவிண்ணை
நோக்கியாய்வான்

நானிலத்தி லக்கருவி
போல்மனிதன்
நடமாடும் விந்தையினை
நோக்குவோமே

ஏனிறைவ னிருப்பதினைச்
சந்தேகிக்கும்
இருளகத்தார் மனிதனையே
மையமாக்கி

மானிலத்தே வந்தமுறை
ஆய்வதாலே
வல்லவனை மல்லாஹ்வைத்
தெரியலாமே.

—2

இறையவனின் சிந்தனையில்
ஆழ்ந்திடுங்கள்
இறுகவிரு விழிகளையும்
மூடிடுங்கள்

கறைபடிந்த ஒலியாவும்
புகுந்திடாது
காதுகளைக் கவனமுடன்
அடைத்தபின்னே

நிறையறியாப் பசப்புகின்ற
வாயதனை
நிறுத்தியுடன் மூடியிறை
வழியிலண்மின்

இறைபெரியோன் ஒளிதெரியும்
உங்களுக்கு
இல்லையெனில் பொறுப்பதற்கு
நானேயாவேன். —3

தண்ணீரின் குணம்குளிர்மை
என்பதினைத்
தணியா தியற்கையிலே
கண்டுவந்தோம்

தண்ணீரில் சூடென்னும்
குணமேயில்லை
தணலருகி லிருப்பதினால்
குணமேமாற்றும்

தண்ணீரே நெருப்பினுக்குச்
சிறையைப்போல
தம்மிறைவ னருகினிலே
மனிதனண்மின்

தன்வேலை போலிறைவன்
வேலையாவும்
தண்ணீர்போல் செய்வதினை
மறக்கலாமோ? —4

உலகிலுள்ளோர் பெற்றவரை
மதித்திடுவர்
உண்மையிறை பத்தியிலே
ஆழ்ந்தபோது
உள்ளமது விரும்புகின்ற
பெற்றோர்தானும்
உரையாடின் அதைமறந்து
வணக்கமதில்
உள்ளாழ்ந் திருப்பதினால்
குற்றமுண்டோ?
உண்மையிறை பத்தனவன்
தனைமறப்பான்
உலகினையே நினைவெடுத்து
வணங்குகையில்
ஒருமித்த மனநிலையே
கிடைக்காதன்றோ. —5

எண்ணமெனும் இரும்புச்
சட்டையுள்ளே
ஒளிந்துள்ள மனிதன்தன்
விருப்புப்போல
எண்ணியெண்ணி அசைப்பதினால்
எண்ணம் மாறும்
இதுபோல எண்ணத்துள்
மறைந்திருக்கும்
எண்ணத்தைத் திருப்புகின்ற
பேராற்றலே
எண்ணுகின்ற மனிதனையே
இயக்கிநிற்கும்.
நன்றுமுறை நாமறிந்த
பேராற்றல்தான்
நானிலத்தி லுள்ளனைத்தும்
இயக்குதன்றோ. —6

''இம்மைக்கும் மறுமைக்கும்
இடையிலொரு
இருளாகத் திரையொன்று
உண்டென்றாலும்

நம்முன்னே அதைக்கிழித்
தெறிந்துவிட்டால்
நன்பிக்கை அதிகரிக்க
இடமேயில்லை''

என்பதினை உரைத்திட்ட
அலியவர்கள்
உன்னதமாம் மொழிதனையே
நோக்கிப்பாரும்

தன்மனதி லிறைவனையே
வைத்திருப்போர்
தகுதியென உண்மைக்கு
உரியவராம்; —7

எல்லையற்ற அறிவினையே
அடக்கியுள்ள
எம்மிறைவன் முழுவதையும்
மனிதனுக்கு

வல்லதுவா யாக்கிவிட்டான்
வழியேவிட்டால்
வந்தமர்ந்து கொள்கின்ற
நெஞ்சம்கொள்ளா

சில்லறையில் மருந்துவிற்கும்
கடைக்காரனே
சிறிதளவு தேவைக்கே
மருந்தளிப்பான்

தொல்லைகொடுத் தவனிடமே
வாதம்செய்தால்
தொடர்ந்தளிப்பான் பாத்திரமே
தாங்கிவிடா. —8

## 33

இம்மையிலே வாழவைத்த
இறையவனே
இகத்தினிலே எத்தனையோ
வைத்துமுள்ளான்

இம்மையென்னும் வெளித்தோற்றம்
மறுமையெனும்
உட்பொருளை உணர்த்துதற்கு
மூலமாகும்

இம்மையினைச் சித்தரித்த
ஒருவனின்னும்
உயர்வான சித்திரத்தைத்
தீட்டவல்லோன்

இம்மையென்னு முடலினுக்கு
உட்பொருளாய்
உயிரொன் றிருப்பதினைக்
காணலாமோ? —9

உலவுபவர் வதனமதை
உற்றுநோக்கு
உண்மையரை அண்மியுடன்
சேவைசெய்தால்

நிலவுமுகம் ஒருகால்நீ
கண்டிடுவாய்
நிழலாடும் ஷைத்தானே
ஆதம்போல

அழகுமுக உருவெடுத்து
உலவக்கூடும்
ஆனதினா லனைவரையும்
தழுவிடாதே

அழகுசிறைப் பறவைகளை
அகப்படுத்த
அதன்குரலை எழுப்புவது
வேடனல்லோ. —10

உயரத்தில் பறக்கின்ற
பறவைநிழல்
உண்மைபோல் தரையினிலும்
பறந்துசெல்ல

துயரத்தை அறியாத
மூடனவன்
துரத்தியதைப் பின்தொடர்ந்து
ஓடுகின்றான்

உயரத்தில் பறக்கின்ற
மூலஸ்தானம்
உணராத அறிவீனன்
அம்பையெல்லாம்

துயரத்தால் எய்தெய்து
காலிசெய்தான்
தொடர்ந்தோடி வாழ்நாளும்
கழியலானான். —11

நல்லநிற வர்ணங்கள்
சுத்தமுடை
நல்லதொரு தொட்டியிலே
கிடைப்பதாகும்

அல்லனவா யுள்ள
தீமைநிறம்
அநீதியெனும் கறுப்புநீர்
தனிலேயுண்டு

நல்லதெல்லாம் இறையவனின்
ஞானஸ்நானம்
நாற்றமுடைத் தீயவைகள்
அவன்முனிவு

எல்லையிலாத் தூரத்தே
இருப்பதெல்லாம்
இருந்தவிடம் தேடியுடன்
நாடிநிற்கும். —12

விருந்தளிப்போன் முன்னிலையில்
வாலையாட்டி
விடியும்வரை கூடார
வாயில்காக்கும்

துருக்கியனின் நாய்வேறு
அந்நியனைத்
தொலைவினிலே கண்டாலும்
கூடாரத்தே

நெருங்கிவரின் சிங்கத்தைப்
போலுறுமும்
நெருக்கமுடன் எஜமானன்
பத்திகொண்டு

இறைவனே துருக்கியனிற்
சத்தியுயர்வோன்
என்னிலையோ விசுவாசம்
நாய்க்கதிகம். —13

✓ இறைவன்மேல் பாரத்தைப்
போட்டுவிட்டு
இயங்கா திருப்பதினால்
இலாபமென்ன?

இறையவனி னன்புக்கு
உரியவர்கள்
உழைத்துண்ணும் பேர்வழிக
ளென்பதுண்மை

நிறைமுயற்சி நோய்மருந்து
யதார்த்தமென்று
நிலவுமிவை வேண்டாதென்
றுதறுபவன்

திறமையுடன் சாதனையி
லுழைப்புதனைத்
திறந்துணர்த்தும் நிலைநமக்குத்
தெரியுமல்லோ. -14

மறைவான வெப்பொருளு
மெதிரிடையாய்
மற்றொன் றிருப்பதினால்
வெளியாகுமே

நிறைவான விருள்சூழ்ந்த
இடந்தனிலே
நிறமிருப்பின் பார்ப்பதற்கு
ஒளியேவேண்டும்

உரமாக இவையறிய
எதிரிடைகள்
எப்போதும் வேண்டுவதை
உணரலானோம்

தரமான வுயரிறையோன்
ஒளிக்கெதிராய்த்
தக்கதெது? யிலையதனால்
வெளியேயில்லை. −15

எண்ணமெனும் கடலிருப்ப
தெங்கறியோம்
எழுகின்ற குரலோசை
அங்கிருந்தே

உண்மைக்கு மாறில்லாக்
குரலோசைதான்
உணர்த்துகின்ற மூலமெதும்
நல்லதுவே

கண்முன்னே எழுமிவைகள்
அழிந்துடனே
கடலினிலே மறைவதினால்
வடிவமற்ற

உண்மையொன்றிற் றோன்றுகின்ற
வடிவமெல்லாம்
உடனழிந்து அதனிடத்தே
மீழ்பவைதான் −16

இறையவனே இகபரத்தைச்
சூழ்ந்தறிவான்
இதற்கெதுவும் மற்றதற்கு
இடையூறல்ல

''இறையவனே ஏனெனையே
கெடுத்தாய்'' என்று
இபுலீசுயவன் செயலை
மறைத்துப் பார்த்தான்

''இறையவனே ஆத்மாக்குத்
தீங்குசெய்தோம்
என்று தம் தவறுணர்ந்து
பிரார்த்தித்தாரே

கனிவுக்குப் பிரதியெனக்
கனிவுகிட்டும்
கற்கண்டுடன் வருவோன்
அல்வாஉண்பான். 17

தூக்கத்தி லிறையவனின்
மயக்கத்துள்ளோம்
தூக்கமற அவன்கரத்துள்
இருப்பவர்நாம்

ஏக்கமுற அவன்கருணை
மேகமென
இருக்குங்கால் சிரித்திடலோ
மின்னலாகத்

தாக்குமொளிர் விடுகின்றோம்
கோபம்சண்டை
தயவுடைமை மன்னிக்கும்
தயாளகுணம்

ஆக்கமுறும் நல்லவைகள்
அத்தனையும்
அல்லாஹ்வின் அன்பினது
பிரதிபிம்பம். 18

பலதடவை ஓதுதற்கா
திருக்குர்ஆன்
படித்துமனப் பாடமாகச்
செய்வதற்கா?

நிலையுடைய இப்பெரிய
வேதநூலை
நிலையுடையா னிறக்கியது
எதற்குக் கூறும்

கலையறிந்து ஆழமுடன்
நோக்குகையில்
கலைபெருகப் பொருளாழம்
வெளிவருமே

தொலைத்துவிடப் பசியினையே
ரொட்டியுண்போம்
தோய்ந்துமிழ்ந்து துப்புவதால்
இலாபமென்ன? -19

இம்மையிலே பற்றில்லாப்
பெரியோர் சிலர்
எளிமையுடன் மறுமைக்கு
வழிதேடுவர்

தம்முடைய வெற்றிவழி
இறையவனால்
தக்கதெனக் காட்டுவதைப்
பின்பற்றுவர்

நம்முடனே பெருமைதரும்
மறுமைபற்றி
நாளாந்தம் காட்டுபவர்
இவர்கள்தானே

உண்மையென இவரினுக்கு
வழிகாட்டுதல்
உவமையிலாத் திருக்குர்ஆன்
பொருட்சிறப்பே. -20

“எந்நபிக்குத் திருக்குர்ஆன்
வார்த்தையாக
ஏனிறைவன் அருளவேண்டு ?
தொடர்பாயது

வந்திருந்தால் அத்தியாய
மாகவுடன்
வழிநமக்கு முடனே
தெரிந்திருக்கும்”

இந்தவிதம் உண்மையறி
யாதசிலர்
எதிர்வாதம் எழுப்பிவிட
எந்நபியும்

வந்தவைகள் சிறுகவன்று
முழுமையானால்
வல்லவனின் ஒளியில்நான்
கரைவேனென்றார். 21

இஸ்லாத்தில் சிந்தனைக்கு
முதலிடமே
இறையவனு மிதுபற்றி
இயம்பியுள்ளான்

“விஸுவாசி உடனடியாய்ச்
சிந்திப்பாயே
விவரமுடன் ஒட்டகத்தை
மலைதரையைக்

குஷியாகப் படைத்திறைவன்
நிலைப்படுத்திக்
குவலயத்தை விரித்ததினை
அகத்திலேற்று”

அசலாக நம்முன்னே
அளித்ததாலே
அகற்றாது சிந்தனையை
ஏற்கவேண்டும். —22

நற்செலவு சன்மார்க்க
வழியினிலே
நயமாகச் செய்வதறகு
வைக்கும் செல்வம்

பொற்புநிறை நேர்மையுடைப்
பொக்கிஷமே
பொறுப்புடைய நேர்வழியோன்
நன்மையது

பற்றிறைவன் சன்மார்க்கம்
தந்தநபி
பகர்ந்துவிட்ட கூற்றிதுவே
படகொன்றுள்ளே

தற்செயலாய் நீர்வரினே
கவிழ்ந்துவிடும்
தாழ்ந்திருப்பின் நீர்மேலே
மிதந்துசெல்லும். —23

இறையவனின் மெஞ்ஞானப்
பெருங்கடலில்
இணைந்துசெல்லும் நபிமார்கள்
நடைமுறைகள்

அறைவதுதான் திருக்குர்ஆன்
ஆதலினல்
அதன்பக்கம் திரும்புவதால்
பேறடைவோம்

நிறைவுபெறச் சம்பூர்ணக்
குருநாதரின்
நிலையுடனே சேருவதால்
பேரின்பமுண்டு

நிறைவறியா வெளித்தோற்றப்
போலியுடன்
நிற்பதினல் உயிரற்ற
நிலையிலாவோம். —24

காதலியை நெருங்கியுட
னிருக்கும்போது
காதலனி னுள்ளமொரு
முகமாய்நிற்கும்

வேதனையோ சாதனையோ
ஏதுமில்லா
வெறுமனமாய் நிற்பதிலே
ஏதும்தோன்று

தாதலினு லிதுபோன்று
ஞானிகளை
அண்மிவிட்டா லுள்ளமிறை
பக்கமாகும்

சோதனைக ளில்லாது
தீக்குணங்கள்
சோர்ந்துடனே மறைந்தழிந்து
போகுமல்லோ. —25

மற்றவரைப் போல்நடத்தல்
மறந்துடனே
மனமொன்று நமக்கிருத்தல்
தெரியவேண்டும்

நித்தமதை வளர்ப்பதிலே
இயன்றளவு
நிர்ணயித்துச் செயற்படுத்த
முனையவேண்டும்

அத்தனைக்கு முடலினுக்கு
உள்ளமதை
அடிமையென வாக்கிடுத
ஆகாதல்லோ

வெற்றிபெற ஆத்மீக
வழியினுக்கு
விருப்புடனே இம்முறைகள்
மறைத்தலாகா. —26

இறைவனது படைப்புகளின்
தனித்தன்மையை
இங்குள்ள பாமரர்கள்
பார்த்துநிற்பர்

நிறைபடைப்புச் சிருஷ்டிகளில்
இறைவனையே
நேராகப் பார்த்திடுவர்
மெஞ்ஞானிகள்

மறைந்துநிற்கு மொருபொருளைத்
தேடுவதில்
மலிந்துள்ள கோடான
பொருளைப்பார்க்கும்

நிறையறிவின் ஞானிகளின்
நிறைவில்லாதோர்
நிறைந்தபொருள் வெளித்தோற்றம்
பார்க்கின்றாரே. —27

பலமதத்தைப் பின்பற்றும்
மனிதரெல்லாம்
பற்றுடனே இறைவனையே
தேடுகின்றார்

பலதடவை தேடுகின்ற
இறைவனையே
பார்வையிலே பிடித்துவிட்டால்
பேச்சேயில்லை

உலகிலிவ ரத்தனையும்
காணமாட்டார்
இம்மையிலே இடமிதற்கு
இல்லையில்லை

சிலபெரிய மெஞ்ஞானி
இம்மையிலே
செறிபெரியோன் தனையண்மி
நிற்கின்றாரே. —28

இம்மைமட்டும் பார்த்திடுவர்
பாமரர்கள்
இதைவிட்டு மறுமைபார்ப்பர்
மெஞ்ஞானிகள்
இம்மிருவர்க் கப்பாலும்
வேறொருவர்
இவையிரண்டும் பொருட்படுத்தா
திருந்திடுவர்
எப்பொருளும் தொடங்குகையில்
முடிவைப்பார்க்கும்
இறைஞானப் பெரியவர்கள்
உலகிலிவர்
நம்மக்கட் திரளினுள்ளே
குறைந்திருப்பர்
நாட்டமெல்லாம் இறைவழியே
நாடிநிற்பர். —29

சிந்தனையில் மெஞ்ஞானி
சிறப்புடையோர்
சிந்திப்பர் எம்மிலுமே
மாறுடைத்தாய்
எந்தனிலு முயர்ந்திட்ட
தத்துவங்கள்
எடுத்துடனே படம்பிடித்துக்
காட்டிடுவர்
விந்தையுடன் கண்ணாலே
பார்க்காதவை
விழிப்பாக விழிக்கூடாய்க்
காட்டிடுவர்
இந்தவிதம் குழப்பமில்லா
மனநிலையில்
எப்போதும் உயர்ந்திடுவர்
உண்மையுண்டு. —30

பொய்த்தோற்றம் எனும்பிரமை
ஆத்மாவிலே
பிழைக்கேனு மிருப்பதில்லை
பிரமைதனே

மெய்யாகக் கொண்டுசுழல்
உலகினிலே
மேன்மையென ஒற்றுமையும்
வேற்றுமையும்

பொய்யான அகந்தைநிறை
பணிவுமுள்ளோர்
போராடி நிற்பதெல்லாம்
பிரமையினுல்

மெஞ்ஞானி காணுகின்ற
பிரமையெல்லாம்
மேலான இறையவனின்
பிரதிபிம்பம். —31

புனிதமுடை மகான்கள்செயல்
நம்முடைய
புகழ்ச்செயலே யென்றுநோக்கும்
மனிதர்களே

துணிவுடனே ஒன்றெனவே
சமப்படுத்தும்
துர்ச்செயலை செய்தொன்ருய்க்
கணிக்கவேண்டாம்

இனிமைமிகு தேன்சேர்க்கும்
தேனியையும்
இணையான குளவியையும்
ஈயினமாய்

எண்ணிடினு மொன்றுவிஷக்
கொடுக்கினையும்
இன்னென்று தேன் தருவ
தாகுமல்லோ. —32

தோற்றத்தி லொன்றெனவே
இருசாராரும்
தோற்றிவிட்டால் தோன்றுவது
சகஜந்தானே

மாற்றுமிரு சுவையுடைய
தண்ணீர்தானும்
மங்காது தெளிவுதனைக்
கொடுப்பதுதான்

வேற்றுமையை அறிகின்ற
சுவைதெரிந்தோர்
வித்துவர்கள் ஆத்மீக
ஞானியர்தான்

சாற்றுமவர் பகுப்பினையே
காணுதற்குச்
சார்ந்தவரைப் பற்றுதலே
சிறப்புடைத்து. —33

ஒருமனித னுளத்தினொடு
மற்றொருவர்
உளமதுவும் தொடர்புகொண்
டுரைநிகழ்த்தும்

இருவருமே உளமார்ந்
துணர்ச்சிபெற்று
உரைப்பதினு லொலிவெளியில்
இசைப்பதில்லை

பெரும்படியா மின்நிலைக்கு
உயர்ந்திடாதார்
பேசுவதாற் சொல்விரயம்
செய்திடுவார்

உருவமெல்லாம் சாயலிலே
ஒன்றுபட்டால்
உளங்களெல்லாம் ஒன்றெனவே
ஆகிடுமா? —34

மனதிலுள்ள வேதனைதான்
மனிதனுக்கும்
மனம்பொறுக்காத் துன்பமென
வாகிடுமே

நினைவெடுக்க நினைவெடுக்கக்
குறித்துநிற்கும்
நிலையுயர வழியதுவா
யானதாலே

மனவருத்த மற்றவனே
இவ்வுலகில்
மக்களிலே யுயரறிவு
பெறமுடியா

எனும்நினைவை உயிரற்ற
சடப்பொருளில்
ஏற்றிடவே வேதனைதா
னில்லையதில். -35

மூன்றுவகைப் படைப்புகளில்
முதல்வானவர்
முறையிறைவன் கட்டளைகள்
நிறைவேற்றுவர்

மீண்டடுத்து மிருகங்கள்
அவைகளுக்கு
மிளகளவும் பகுத்தறிவே
இல்லையல்லோ

மூன்றாம்வகை மனிதன்;
இறைகட்டளையும்
மிருக வுணர்வும்
இவனுக்குண்டு

முன்னதினால் வானவரின்
நிலையடைவான்
பின்னதினால் பகுத்தறிவை
இழந்திடுவான். 36

சிரிக்கின்ற சிங்காரத்
தோப்பைச்சுற்றிச்
சூழ்ந்துள்ள சுவரோ
முரட்டுத்தோற்றம்
வருகின்ற வழியாலே
மக்கள்கண்ணில்
வளைந்துள்ள சுவர்த்தோற்றம்
தெரிவதாலே
விரைவாகச் சுவர்பற்றி
விளக்கங்கூறும்
விந்தையாம் மனிதனின்
அறியாமைக்கு
நிறைபெற்று வளர்ந்துள்ள
தோட்டமேனோ
நிந்திக்கும் நிலைபெற்று
எழவும்வேண்டும்.

—37

பொறுப்புடைய காரியத்தைச்
செய்யவென்று
பொறுப்பித்து உனையனுப்பி
வைத்தவனின்
பொறுப்பெல்லாம் மறந்துடனே
செயற்படுத்தா
பொறுப்பற்ற உனதுபல
கருமங்களைப்
பொறுப்பெடுத்துச் செய்வதிலே
அலைந்துவிட்டுப்
பொறுப்பித்தவன் முன்னே
விழிக்கும்போது
பொறுப்பேற்றேன்; செயல்வேறு
செய்தேனெனும்
பொறுப்பில்லா வாதமிதை
யார்தானேற்பார்.

—38

அன்புதனைப் பெற்றதெல்லாம்
அழகுடைத்து
அழகுடைய அத்தனையும்
அன்புடைத்தா?
என்கரத்தில் ஏந்தியுள்ள
பாத்திரத்துள்
இதயமதைச் சீர்படுத்தும்
குளிர்மையுண்டு
என்பதினால் பாத்திரத்தை
விரும்புவதில்
ஏதுபிழை? வெளித்தோற்றம்
பார்ப்பவர்கள்
உண்மையினை ஊடுருவ
மறுப்பதாலே
உண்மைதனை அறிந்தவரில்
தாழ்ந்தோராவார். —39

என்னையெண்ணி வந்திருக்கும்
உங்கள்முன்னே
எதையெல்லாம் பேசுகின்றேன்
ஆனால் நீங்கள்
என்னையேற்றிச் சிந்தையிலே
எண்ணுமெண்ணம்
ஒருபோதும் உங்களுடன்
பேசவில்லை
என்னெண்ண மெப்படியோ
அழைத்துவந்து
என்னிடமே உங்களினைச்
சேர்த்துளது
இந்நிகழ்ச்சி யாவினையும்
நினைக்கும்போது
எண்ணத்தின் நிழல்பேச்சு
எனலாமல்லோ. —40

வித்தொன்றை மண்ணினுள்ளே
புதைத்துவிட்டால்
விளைந்துவிடும் தானாகவெனல்
பொருந்தா
சத்துடனே அதுவளரத்
தடைகள்நீக்கின்
சளைக்காது முளைவிட்டு
மரமாகுமே
வித்திங்கு முக்கியமே
மரம்வளர
விளைவதற்குச் சூழ்நிலையும்
முக்கியமே
வித்தினைப்போல் மனிதனது
உள்ளத்தையும்
வளர்த்துவிடச் சூழ்நிலைதான்
உதவிசெய்யும். —41

தோல்காட்டு மினியநிறம்
ஈர்ந்துமாசை
தூண்டியதா லுண்டாகும்
காதலென்றும்
மேல்மட்டில் நிற்பதுதான்
உண்மையல்ல
முடிவினிலே முடிச்சுவிடும்
புகழ்நசுங்கி
தாழ்வான இம்முடிவைத்
தந்தநிறம்
தகையாக உடல்பொருத்தி
நிற்பதில்லை
பாழான முடிவினுக்குக்
காரணமாம்
பண்பழியும் காதலுக்கு
அடிமையேனோ? —42

இம்மையுங்கள் ஆத்மாவின்
சிறைக்கூடமே
இதற்கப்பால் திறந்தவெளித்
திசைதெரியும்

இம்மையொரு வரம்புடைய
கட்டுக்கோப்பு
யதார்த்தமெனும் மறுவுலகு
வரம்பற்றதே

செம்மையுடை யதார்த்தமதை
அடைவதற்கு
செயலாகு முருவமுடன்
படிவந்தானும்

எம்மையிடை யூறுசெய்யும்
பொருட்களாகும்
எய்திடவே யதார்த்தமதை
வழிகாண்போமே. —43

இதயத்தின் வாயினையே
இறுகப்பூட்டி
இறையருளாம் சாரளத்துள்
வரும்வளியைப்

பதைபதையா யிறுகமூடித்
தேக்கிவிடில்
பாரமில்லை கொந்தளித்து
நீர்வரினும்

மிதந்துசெல்வாய் இம்மையெனும்
நீர்ப்பரப்பில்
மிதமான சாந்திதரும்
உள்ளத்தோடு

அதிகளவு காற்றடைத்த
ஜாடிதானும்
அலையடித்துத் தள்ளினாலும்
மிதப்பதுண்மை;

அறிவென்னும் சமுத்திரமே
  பரந்துளது
  அதில்மிதக்கும் குவளையெல்லாம்
  வெறுமையதே

நிறைவுசெய்யத் தட்டினுள்ளே
  நீர்புகுந்தால்
  நிலைதெரியா மூழ்குவதும்
  இயற்கைதானே

மறைந்துடனே அமிழ்ந்திடுதல்
  நிறைஅறிவு
  மறையாததைத் தாங்கும்
  சடலந்தோற்றும்

மறைந்துள்ள சமுத்திரத்துள்
  அறிவலைந்து
  மறையாத உடற்சடத்தின்
  உள்ளேதோன்றும். —45

கண்ணிரண்டில் விரல்நுனியை
  வைத்துவிட்டால்
  ககனத்தே உறும்பொருட்கள்
  தெரிவதில்லை

அண்மியுள்ள இப்பொருட்கள்
  தெரியாததால்
  அழிந்துடனே உலகிலிது
  போகவில்லை

உண்மையதைக் கர்த்த
  குற்றமுந்தன்
  உள்மனமெனும் விரட்கள்
  செய்ததுவே

எண்ணமிட்டுக் கண்மறைக்கும்
  விரல்களையே
  எடுத்துவிட்டால் ரும்புபவை
  காணலாமே. —46

அறிவுபுலன் தேடுபவை
முழுமுதலாம்
ஆதியென்னும் காரணத்தை
அல்லையல்லை

குறுகிநிறைப் பொருள்கொடுக்கும்
இரண்டாந்தரக்
குணநலங்கள் தேடியவை
அலைகின்றதே

செறிவுமிகு ஆத்மீகத்
தேட்டமென்றும்
திக்கெங்கும் பிரமிப்பைத்
தந்துநிற்கும்

நிறைவுடைய ஞானத்தைத்
தேடுதலோ
நெகிழ்வுதரும் சர்ச்சை ப்குத்
தறிவாலல்ல, —47

நீந்துதற்குத் தெரியாத
நிலையிலேநீ
நீள்கடலுள் முரண்டுக்காய்ப்
பாய்ந்திடாதே

சாந்தமுடை நேர்மையாளன்
விஷயமெல்லாம்
சாந்தியிறை அல்லாஹ்வால்
ஏற்றதாகும்

ஏந்தலர்போல் நடிக்கின்ற
குறையுடையோர்
ஏற்றதெல்லாம் ஷைத்தானின்
போக்குகளே

ஆழ்ந்தறிந்தோர் அறியாமை
அறிவேயாகும்
அற்றவன் பெற்றறிந்தவைகள்
அறியாமைதான். —48

உலகவெழில் சிறப்பதற்கு
மனிதனது
உண்மையுடை முயற்சியெனில்
மறுப்புமுண்டோ

திலகமென மனிதனது
செயற்றிறனே
தெளிவெனவே எவ்விடத்தும்
தோற்றல்பாரீர்

நிலைமைதனைச் சீர்படுத்த
இறைபெரியோன்
நிறைவுடனே மனிதனுக்கு
ஆற்றலீந்தான்

பலதிலுமே முயற்சிதனைத்
துறந்துவிட்டால்
பண்புலகம் தேங்கிநிற்கத்
தொடங்குமல்லோ. -49

மனிதனென்பான் ஈடுபடும்
வேலைதனை
மகத்தான குறிக்கோளாய்
எண்ணுகின்றான்

இனிமையென அவன்தேடும்
பொருள்தானென்ன;
இகத்திலொரு பெண்ணினையே
தொடர்ந்திடுவான்

தனிமையுடன் இன்னொருவன்
பதவிதனைத்
தட்டிவிட முயற்சிபல
செய்துநிற்பான்

இன்னொருவன் அறிவுதனைத்
தேடிநிற்பான்
இவையாவும் இன்பத்தின்
பலவழிகள். -50

வஞ்சனையும் நீதியற்ற
அகந்தையாலும்
வழிதவறி அக்கிரமம்
செய்பவர்கள்

தஞ்சமெனத் தன்னுள்ளே
இருப்பவற்றைத்
தவருக மற்றவருக்
கேற்றிப்பார்ப்பர்

விஞ்சியவர் அநீதிபல
இழைப்பதாலே
வியப்புடனே தனைத்தானே
சாடிடுவர்

எஞ்சியுள்ள தன்சாபம்
கண்டுமீண்டும்
எளிமைகொண்டு | தீமைதனை
வெறுப்பர்பின்பு. —51

உலகிலுள்ள மதம்குறித்துக்
குழம்பவேண்டாம்
உண்மையிலே வேறுபாடு
இருந்துவரும்

பலவழிகள் ஒன்றினையே
அடைவதற்குப்
பார்த்தறிந்தால் சிறப்புளது
நமதுவழி

நிலைமையினை அறிந்துமுறை
பின்பற்றிஞல்
நித்தியனை அடைந்திடலாம்
பயமேயில்லை

பலவழிகள் என்பதினை
அழிக்கவெண்ணில்
பட்டுவிடா உலகிலிது
சாத்தியமா? —52

மனபலத்தை அதிகரிக்க
இறைவனிடம்
மன்ருட்டம் தேடுவதில்
முன்னே நில்லு

மனதினேயே மட்டாக
வைக்காதவன்
மறைபெரியோன் கருணையினேப்
பெறமுடியா

மனத்தினேயே அடக்க
முடியாதவனே
மடமையினு லவனேயுமே
கெடுப்பதுபோல்

இனச்சார்பை உலகினிலே
பரவச்செய்து
இகமெல்லாம் தீயிட்ட
செயலேச்செய்வான். —53

ஏழைவரி கொடுக்காத
இயல்புடையோர்
இழிநிலேயால் முகில்மழையைக்
கொடுப்பதில்லே

பீழைகொள்ளே நோய்பரவி
அந்தநாட்டில்
பிழைபெருகும் விபச்சாரச்
செயலுண்டாகும்

வேளேதொறு மொழுங்கற்ற
செய்கைகளின்
விளேவாகத் துன்பமெல்லாம்
வந்தடையும்

வீழுகின்ற துர்நலங்கள்
வந்துசேரின்
விகற்பமுடைக் குறையகந்தை
செய்திருப்பாய். —54

உன்னுடைய இரகசியத்தின்
புதைகுழியாய்
உன்னிதய மிருப்பதினல்
ஆசையெல்லாம்

உன்னியுடன் நிறைவுபெறும்
என்பதற்கு
உண்மைநபி உரைத்திட்ட
மொழியிதுவே

"தன்னெண்ணம் தனைமறந்து
வைப்பவனே
தன்மனத்தின் பீஷ்டத்தை
அடைவானென்ருர்

மண்ணுள்ளே புதைந்திருந்து
விளைவுபெறும்
மகிமையுடை உலோகங்கள்
விதைகள்பாரீர்! —55

தீமையினைப் பண்பெனவே
கொண்டுலாவும்
தீயவரைப் புகழ்ந்துரைத்துப்
பாராட்டுதல்

நாமிழைக்கும் துரோகமதால்
உன்னதமாம்
நல்வான மண்டலமும்
நடுங்கிநிற்கும்

தாமுரைக்கும் கேடான
புகழ்ச்சியினல்
தகைசிறந்த நல்லவரும்
மாறிநின்று

தீமையினைச் செய்துலகிற்
புகழ்ச்சிவாங்கத்
திட்டமிடும் காரியத்தைச்
செய்கின்ருரே. —56

வஞ்சகத்தை மனத்தடைத்து
வழமையாக
வல்லவனை ஐக்காலந்
தொழுபவர்கள்

தஞ்சமென இறைபணியும்
ஷூமினோடு
தகைமையுடன் செயும்நடிப்பு
இறைவனையே

அஞ்சுவதற்கல்ல அவர்
கலகம் செய்வோர்
அல்லாஹ்வின் பாதையினில்
இருவகையோர்

மிஞ்சிவிடும் தானத்தில்
வெற்றிதோல்வி
மிகுதியுண்டு வெற்றி
விசுவாசிகட்கே.. —5

பொய்யுடலே பொறுமையின்
வீடாகுமே
பொறுக்காது பொறுமைக்
கிடமளித்தால்

பொய்யான ''இபுலீஸின்''
கூட்டம்சேர்வோம்
பொறுமையற்று ஆதம்தனை
இகழ்ந்துகொண்டு

மெய்யான பேரின்பத்
தோடெதிர்த்த
மூர்க்கன் ''இப்லீஸ்'' செய்கை
அறிந்துள்ளோமே

உய்வாகும் ஆத்மீகப்
பாதைசேர
உவப்பாகப் பொறுமைதனை
எதிர்த்துநிற்பாய். —58

இதயமற்ற வெறுமையுடைக்
கல்லைப்போல
இருந்துவிடில் முடை
ஞானியரை

பதைபதைப்பே இல்லாது
அண்மிவிடின்
பளபளக்கும் பாணிக்கம்
ஆகிடலாம்

இதயத்தே அன்புகொளல்
எனும்தருவை
இறுக்கியே நாடிவிட்டால்
இன்பமுண்டு

உதயத்தே சூரியனின்
வெளிச்சமுண்டு
உதறிவிட்டு இருதிசையை
நோக்கவேண்டாம். —59

கீழ்மனதை உடையவரின்
செயல்களெல்லாம்
கீழான ஏமாற்றாய்
வெளிவருமே

சீழுடைய இச்செயல்கள்
ஒவ்வொன்றிலும்
சிறுமைபெறும் ''பிர்ஒளன்''கள்
மூழுகின்றார்

கீழ்மனத்தின் உருவமதைக்
காணநாடின்
கீழான எழுநரகின்
கதையைப்பாரேன்

கீழான மனமடக்கல்
இலகுவல்ல
கீழ்நிலையைத் தேர்ந்தறிதல்
கடமையாகும். —60

வுழிப்புடனே திரிபவனே
அறிவுடையோன்
வெளிதனிலே மறைந்துலவும்
பகைவருண்டு

அழிப்பதற்கு ஊசலாடும்
நல்லதீய
ஆட்டிவைக்கும் சிருஷ்டியெங்கும்
மறைந்திருக்கும்

களிப்புநிறை அமரர்களின்
உதிப்பினுலும்
கறையுடைய ஷைத்தானின்
கெடுதலாலும்

பழிநமக்குச் செய்யவல்லோர்
ஆயிரமாம்
பார்த்திடலாம் சடப்புலனே
அழிந்தபின்பு. —61

கலந்திருப்போர் சிந்தனையில்
பிறப்பதெல்லாம்
கனிவுநிறை நுண்ணறிவும்
தெளிவுமாமே

பலம்பெறவே ஒருவர்மனம்
மற்றவர்க்கு
படித்துணர்த்து மென்பதினை
அறியலாமே

புலனுணர்ந்து யோசனைகள்
சொல்பவனே
பொறுமையுடன் கலந்தறிந்து
சரியுணர்ந்து

பலமுடைய சிந்தனையை
நோக்கிவரும்
பற்றுடையோர் நாடுவதால்
பார்த்துக்கூறு. 62

தூரவழி போவதே
தீர்மானிப்பின்
துணையிருக்கும் செல்வமதைக்
கோட்பாட்டினை

நேரடியாய்ச் செய்கின்ற
ஆயத்தங்கள்
நினைத்தெவர்க்கும் கூறுவதால்
பகைவர் தொல்லை

ஊரைவிட்டுப் போனபின்பும்
தொடர்ந்துவரும்
உண்மையிது கண்ணாடி
முன்னேநின்று

ஆரமர மூச்சுவிடு
அதன்தெளிவே
அற்று நிறம் மங்கலாதல்
உண்மைதானே. —63

உன்னிடமே பகைமைகொண்ட
பேர்வழிகள்
உவப்புடனே பேசுவதால்
பழகுவதால்

என்னிடமே அன்புடையோன்
எனநினைத்தல்
ஏற்றதல்ல அகப்படுத்தும்
கண்ணியிது

முன்னிலுமே கவர்ச்சியுடை
மொழிபேசுதல்
முற்றிலுமே போலியது
கண்ணித்தினி

உன்னதமா யுனக்களிக்கும்
இனிமைநச்சு
உடலினுக்குச் செயும்நன்மை
கொடுமையாமே, —64

ஸபீனா பதிப்பகம்

ஸபீனா பதிப்பகம்

# ஏ. இக்பால்

ஈழத்து இஸ்லாமிய இலக்கிய எழுத்தாளர்களிடையேயும், தமிழ் எழுத்தாளர்களிடையேயும் பிரபலம் வாய்ந்தவராகப் பிரகாசிக்கும் ஏ. இக்பால் அவர்கள், கவிதைகள், உருவகக் கதைகள், விமர்சனக் கட்டுரைகள், சிறுகதைகள், இஸ்லாமியக் கட்டுரைகள் என்பனவற்றைப் பிரபல்யம் வாய்ந்த இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் 1956-ம் ஆண்டிலிருந்தே எழுதி வருகின்றார். பகிரங்கப்படுத்த விரும்பாத பிரபலமான இரு புனைபெயர்களுக்குள் மறைந்திருந்து ஒன்றால், ''இஸ்லாம் மார்க்க விளக்கம்'' செய்து கொண்டும் மற்றையதால் இஸ்லாமியர்களது வாழ்க்கையோடு ஒட்டிய அரசியற் பிரச்சினைகளை அம்பலப்படுத்திக்கொண்டும் இருக்கிறார். இலங்கை வானொலி முஸ்லிம் பகுதியில் 'கவிதைப் பொழிவு' எனும் பெயரைக் கொடுத்து முதன்முதல் கவிதைப் பொழிவு செய்தவரும் இவரே! நுணுக்கமான இலக்கியப் பார்வையும், மனித நோக்கும் கொண்ட இவரது கவிதையொன்றை உருவ உள்ளடக்கச் சிறப்பு நோக்கி 'சென்னை வாசகர் வட்டத்தினர்' 'அக்கரை இலக்கியம்' என்னும் தொகுப்பு நூலில் சேர்த்து வெளியாக்கியுள்ளனர். ஈழத்துப் பிரபல பத்திரிகையொன்றில் வெளியான இவரது இலக்கியக் கட்டுரைகள் சிலவற்றை மலேஸியத் தின இதழான 'தமிழ் மலர்' மறுபிரசுரம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதே! 'முஸ்லிம் கலைச்சுடர் மணிகள்' எனும் முதல் நூலுக்குப்பின் இரண்டாவதாக வெளிவருவது இந்நூலே!

Cover printed at Shabina Press, Colombo-12, Phone: 2 8 3 7 4